போஸ்டு ரி. ரெ. 819.

உ

கடவுள் துணை.

விவேகபாநு

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக—திருக்குறள்.

தொகுதி ௩. } விரோதி௵ ஆவணி௴ } பகுதி ௫

பொருளடக்கம்.

தேகப்பயிற்சி—பத்திராதிபர் கடுஎ

சிநேகமும் அதன் தன்மையும்—நா. சா. இராமசாமிப் பிள்ளை. கசுங

மாலினீ மாதவம—R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A. B. L. கசுச

கீர்த்தார் பெருமை—காஞ்சை முருகேசன் கஎச

மேகஸந்தேசம்—R. S. நாராயண்ஸ்வாமி ஐயர் B. A. B. L. கஎஅ

அரிச்சுவடியைப்பற்றிய ஓர் ஐயவினவிற்கு விடை. } நா. முருகப்பசெட்டியார் கஅரு

சமாசாரக்கொத்து—பத்திராதிபர் கஅஅ

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்—புரொப்ரைட்டர்.

ம. கோபாலகிருஷ்ணையர். } பத்திராதிபர்
மு. ரா. கந்தசாமிக் கவிராயர். }

வருஷ சந்தா தபாற்கூலியுடன் ரூ இரண்டுதான்.

மாணக்கர்கட்கு வருஷசந்தா ரூ 1. தபாற்கூலிவேறு. தனிப்பிரதி அணா 3.

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெறறது.

வித்தியாபாநு விளம்பரம்.

இதை நினையுங்கள்.

உங்களுக்கு நவீனமும் நாகரீகமுமான நூதன பாரிஸ் கலர்களில்

அ தா வ து,

ரோஜா, கத்திரிப் பச்சை, நீலம், மேகவர்ணம், பவளம், வெளிர்ப்பச்சை, தாமிரம், ஆரஞ்சு.

இந்தக் கலர்களில்

ரவிக்கை குட்டைகளும், புடவைகளும்

தேவையாயிருந்தால் நீங்கள்

காசியிலுள்ள பட்டு வர்த்தகர்

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி

க்குத்தான் எழுதவேண்டும்.

ஏனெனில்,

நம்மவர்களுக்கு பஸந்தான பலவிதமான தினுசுகள் அவர்களிடத்தில் தான் ஜாஸ்தியாக இருக்கின்றன.

அநேக ஸ்திரீகள் தங்களுக்குத்தகுந்த ரவிக்கை தினுசுகளும் புடவை தினுசுகளும் கிடைப்பதைப்பற்றிக் குறிப்பாக இருக்கிறார்கள்.

இந்தக் கம்பெனியார் சப்ளைசெய்யும் தினுசுகள் வெளியூர் ஜனங்களுக்கு நல்ல திருப்தியைக் கொடுக்கமுடியும்.

இவர்களுக்கு வரும் வெளியூர் ஆர்டர்களை மிக கவனத்துடன் கவனித்து அனுப்புவதால வெளியூரார்களுக்குத் தகுந்த தினுசுகளே அனுப்பப்படு மென்பது திண்ணம.

42 இஞ்சு அகலம் 8 கஜம் நீளம	புடவை 1க்கு விலை ரூ 25 முதல் ரூ 50 வரை.
42 இஞ்சு அகலம் 20 இஞ்சு நீளம்	ரவிக்கை 1-க்கு விலை ரூ 2—8—0 முதல் ரூ 5 வரை

எங்கள் ஜெனரல் கேட்லாக் இனாமாக அனுப்புவோம். எமது சரியான விலாசத்தை மறந்துவிடாதிருக்க பிரார்த்திக்கின்றோம் (விலாசம்)

கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி.

பட்டுப்பீதாம்பர வர்த்தகர், ஸ்ரீகாசி. *Benares City.*

உ
கடவுள் துணை.
விவேக பாநு.
மதுரையில் பிரசுரமாகும்
ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி கூ. } விரோதிகிருது ஞு ஆவணிமீ { பகுதி ரு.

தேகப் பயிற்சி.

சிலம்பமுதல் மல்லயுத்தம் தேசிகனட கொள்ளின்
பலம்பரவும். மெய் இறுகும். பன்னத்—தலங்குபசி
உண்டாம். கபவாத மோடுவலி சூலையும்போம்.
உண்டாம் மனத்திடமும். ஓர்— தேரையர்.

மானிட ஜென்மத்திற்குரிய கடமைகளைத் தீரச் செய்யவும், இவ்வுலகத்தில் எவரும் கடவுள் படைத்திருக்கிற சிறந்த பொருள்களைக் கிரமமாக உபயோகித்து அநுபவிக்கவும், பிறர்க்குச் சுமையாயிராமல் சகாயமாயிருக்கவும் வேண்டுமானால் அனைவரும் கூடுமான வரை சௌக்கியமாக வாழ்ந்திருக்கவேண்டு மென்பதை யாவரும் அறிவர்.

தேகம் சௌக்கியமா யிருப்பதற்குப் பயிற்சி இன்றியமையாதது. நமது சரீரம் பல உறுப்புக்களைக் கொண்ட ஓர் மிக நுட்பமான இயந்திரம் போன்றது. தொழிலற்றுக கிடக்கும் யந்திரம் விரைவில் பழுதுபடுவதுபோல பயிற்சியற்ற உடம்பும் சீக்கிரத்தில் பாழாய்ப்போய்விடும். பயிற்சி செய்வதால் சரீரத்தினுள்ள துர்நீர் வேர்வை ரூபமாகத் தோலிலுள்ள எண்ணிறந்த துவாரங்களின் வழியாய் வெளிப்படுகின்றது. அன்றியும் பயிற்சி செய்வதால் மட்டுமே இரத்த ஓட்டம், பசி, ஜீரணம், நாடி நரம்புகளின் முதிர்ச்சி, மார்பு விசாலிப்பு, கறுப்பு இரத்தம் சிவப்பாக மாறுதல் முதலியனவும ஞாபகசக்தி, சிந்தனைசக்தி, அறிவு தற்காப்பு தன்னம்பிக்கை முதலியனவும் பெறலாம்.

"நாளுக்குநாள் தேகம் பலவீன முறுகின்றது. இராப்பொழுது போகவே இல்லை. செவ்வையாய்த் தூக்கம் என்பதே கிடையாது. தின்னசோறு ஜீரணிக்கமாட்டேன் என்கிறது. பசி மந்தித்துப்போயிருக்கிறது. வாயில் ஜலம் ஜலமாக ஊறுகிறது." என்றும், சிற்சிலவேளை இவற்றோடுகூட, "மலச்சிக்கலினாலும் சீல் வாயுவினாலும் மிகவும் வருந்தவேண்டி வருகிற" தென்றும் அநேகர் முறையிடக் கேட்டிருக்கிறோமன்றோ? அவர்கள் அவ்வாறு வருந்திக்கூறக் காரணமென்ன? தேகப்பயற்சியின்மையே யாகும்.

"தேகத்திற்குப் பயிற்சி எவ்வாறு நன்மைபயக்கும் என்பதை ஒருவாறு விளக்கிக்காட்டுவோம்: நமது சரீரமானது பயிற்சிக்கப்படுங்கால் உடம்பும் கைகால் முதலிய உறுப்புக்களும் அசைகின்றனவல்லவா? அவை அசையும்போது தேகத்திலுள்ள மாமிசம் தனக்குள்ளே இருக்கும் உதிர நரம்புகளை அழுத்துகின்றது. பிச்சாங்குழலை அழுத்தினால் தண்ணீர் பீறிடுவதுபோல உதிர நரம்பை அழுத்தினால் ரத்தம் வேகமாய் ஓடி உடம்புமுழுதும் பரவும். உதிரம்பரவவே சரீரத்தில் உள்ள, இருதயம், சுவாஸாசயம், இரைப்பை, குடல் முதலிய உடலின் உள்ளுறுப்பு ஒவ்வொன்றும் வேகமாய் அசைந்து தன் தன் வேலையைச் செய்கின்றது. எங்ஙனமெனில், இருதயம் விரைவாய் அடித்துக்கொள்ள ஆரம்பிக்கிறது. அதிலிருந்து உதிரம்வந்து சேரும்போதெல்லாம் அதைச் சுத்திசெய்யப் போதிய காற்றைத் துரிதமாய் சுவாசாயம் ஏற்றுக்கொள்ளத் தொடங்குகின்றது. சுத்திகரிக்கப்பட்ட இரத்தம் வேகமாய் தேகமுழுதும் பரவி, கெட்டுப்போயிருக்கும் தாதுக்களைச்சுத்திசெய்து, தான் செல்லுமிடமெல்லாம் ஊட்டம் கொடுத்துக்கொண்டே போகிறது. உதிரம் விரைவாய் ஓடுவதால் ஒவ்வொரு உறுப்பும் உறுதியும் உற்சாகமு முறுகின்றது: இரைப்பை உணவை ஜீரணமாக்குகிறது. குடல் அன்னப்பாகினின்றும் அன்னசாரத்தை வேறாகப் பிரிக்கின்றது. நன்றாய் வேர்வை உண்டாகிறது. இவ்வாறு முன் உட்கொண்ட உணவு சீக்கிரத்தில் நன்றாய் ஜரித்துப்போவதால் பசி தீபனமும் நன்றாய் உண்டாகிறது."

தேகத்தைப் பயிற்சிக்கும் மார்க்கங்கள் பலஉள. அவற்றுள் சில கூறுவோம்:—

உலாவுதல் அல்லது நடத்தல்:—இது பயிற்சிகள் பலவற்றி லும் சுலபமானது. என்றாலும் இது அவ்வளவு இன்பத்தைத் தருவ தன்று. இன்பத்தைத் தரவேண்டுமானால் மனதொத்த நண்பர்களுட னும் பிரகாரணம்புறறியும் அது செய்யப்படவேண்டும். நடக்கும் பொழுது எவ்விதமான கவலையும் மனதில் இருக்கப்படாது. நடப்ப தால் கறுப்பு இரத்தத்தை சுத்தப்படுத்தக்கூடிய சுத்தமான காற் றுப் பெறுவதுடன் இரதத ஓட்டமும் பெறலாகும். இப்பயிற்சிக்குக் காசுபணம் செலவில்லையே!

ஜோடிக் கட்டை சுழற்றல்:—இது மார்பை விசாலப்படுத்தி தசையை இறுக்கி சரீரமுழுதும் இரத்தத்தைப் பரப்பும்.

'கசரத்' அல்லது தண்டம்:—குப்புற்று சரீர பாரம் முழுமையும் பூமியில் ஊன்றப்பட்ட கைகளிலும் கால் விரல்களிலும் நிறுத்தித் தேகத்தின் பலபாகங்களையும் நானுவிதத்திலும் திருப்புவதால், தசை, நாடி நரம்பு, முதலியன அழுத்தப்பட்டு தேகத்தின் ஒவ்வொரு பாகமும் தொழில் பெறுகின்றது.

இவற்றைத் தவிர இலாபத்தையும் இன்பத்தையும் தரக் கூடிய சிலவிளையாட்டுகள் உள்ளன. அவை கால்பந்து, கிட்டிப்பந்து, பலீன்சடார், கிளித்தட்டு, நீந்துதல், சிலம்பம் மல்யுத்தம், சவாரி செய்தல், கத்தி சுழற்றல், குத்துச் சண்டை முதலியன. இவை செய் யுங்காலையில் நாம நமது நணபாகளுக்கிடையில் இருப்பதால் நம்மை அறியாமலே ஊக்கமும உற்சாகமும உண்டாகும. இவற்றுள் பெரும்பான்மைய பஞ்சேந்திரியங்களுக்குக சேனும அவற்றுள் பல வற்றிற்கேனும் பயிறசி தருவன ஆகும.

தேகப் பயிற்சியினால் சரீரத்தின் ஒவ்வொருபாகமும் வலிமை அடைகின்றது. அதிலும் எந்தபாகம் அதிகமாகப் பயிற்சி செய்யப் படுகினறதோ அதற்கே அதிக பலம். இதனைப் பின்வரும் விஷயங் களால் அறியலாம்:—கொல்லனுடைய கைகள் விடாமல் வேலை செய்வதால் எவ்வளவு உறுதியாய்ப் பருத்திக்கின்றன! எ்தயற் காரனுடைய கால்கள் அதிகமாய் உபயோகப்படுத்தப்படாமல் மடங்கி நாள் முழுதும் கிடப்பதால் எவ்வளவு மெலிந்து பலவீனப் பட்டிருக்கின்றன! ஆனால் எல்லா உறுப்புகளையும் ஒரே சமமாக உபயோகிக்கின்ற சிப்பாய்கள் கப்பலாட்கள் முதலியவர்கள் எவ்வ ளவு புஷ்டியாயும் திடமாயும் வளர்ந்திருக்கின்றனர்! விகிதர்களு டைய கைகளோ பலனற்று மெலிந்திருக்கின்றனவன்றோ? ஆத லால் சரீரத்தின் ஒவவொரு பாகமும் நன்றாய்ப் பிரயாசப்படும்படி செய்யும் பயிற்சியே தேகத்திற்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரும் பயிற்சியாகும்.

தேகப்பயிற்சி செய்வோர் கவனிக்கவேண்டிய அதி முக்கியமான விஷயங்கள் சில உண்டு :—

1. தேகப்பயிற்சி காற்றோட்டமான வெளிகளில் செய்யப்படவேண்டுமே யொழிய காற்றோட்டமில்லாத இடங்களில் அதைச் செய்யக்கூடாது.

2. இராக்காலத்தை விடப் பகற் காலத்தில் பயிற்சி செய்வதே தேகத்திற்கு நன்மை. ஏனெனில், இரவில் பனி காற்று முதலியவற்றால் எவ்வளவோ கெடுதிகள் விளையும்.

3. வயிறு நிரம்பப்புசித்தபின் எப்பொழுதும் கடும்பயிற்சி செய்யவே கூடாது. அளவிற்கு மிஞ்சியும் பயிற்சி கூடாது. மிஞ்சினால் சுவாச ஓட்டப்பிறழ்ச்சி, கைகால் வீக்கம், குடற்பிதுக்கம், நரம்புகளின் முறை வழுவல் முதலிய தீமைகள் உண்டாகும்.

(4) தேகப்பயிற்சியை ஒரு நாள் செய்து பல நாள் விட்டுவிடாமல் ஒழுங்காகச் செய்துகொண்டு வரவேண்டும்.

தேகப்பயிற்சியினால் உடலூரம் பெற்றவர்களே தமக்கும் பிறர்க்கும் பயன்பெறத்தக்க காரியங்களைச் செய்வாரென்று கருதியே முன்னாளில் கிரீஸில் அரசாங்கத்தார் அதிக சிரத்தையெடுத்துக் கொண்டு தேகப்பயிற்சி சம்பந்தமாய்ப் பல கண்டிப்பான விதிகளை ஏற்படுத்தியும் அதில் வல்லாருக்கு வருடந்தோறும் பரிசளித்தும் ஊக்கமூட்டி வந்தனர் என்னும் விஷயம். "ஒலிம்பிக் கேம்ஸ்" ("Olympic games") என்பதைப் பற்றி அறிந்தோரும் கிரேக்கர் சரித்திரம் படித்தோரும் அறிவர். இப்போது நமது காருண்ய துரைத்தனத்தாரும வித்தியா இலாகா தலைவரும் முறையே இராணுவத்திற் சேர விருப்பமுள்ளார்களும், மாணாக்கர்கட்கும் தக்க உபாத்தியாயர்களைக் கொண்டு தேகப்பயிற்சி கற்பித்துவருவதும் நம் நாட்டிலும் முன்காலத்தில "கரடி"ப் பள்ளிக்கூடங்கள் இருந்ததும் இப்பொழுதும் ஆங்காங்கு இருந்துவருவதும் நாமறியாதனவே. ஆயினும் நம்மவர்களிற் பலர் தேகப்பயிற்சி இத்தன்மைத்தென்றே அறியாமல் திரிவது நமது துரதிருஷ்டமே. ஐரோப்பாவுக்கு ஸாண்டோவும் இந்தியாவிற்கு வீமசேனன் எனத்தகும் இராமமூர்த்தியும் எவ்வளவு பெருமையை விளைவித்திருக்கின்றனர்!

இனி நாம் சொல்லவேண்டிய விஷயம் சிறிதே: இளமை கடந்துவிட்டால் எவரும் எந்தக்காரியத்தையும் எளிதிற் செய்யமுடியாதாதலின் இன்றியமையாத இதனை ஒவ்வொருவரும் தக்ககாலத்தில் செய்யத்தொடங்கித் தமக்குந் தமது தாய் நாட்டிற்கும் புகழைத்தேடுவாராக.

பத்திராதிபர்.

சிநேகமும் அதன் தன்மையும்.

"சிநேகம்" என்பது ஒருவர்மீது ஒருவர் பாராட்டும் அந்தரங்க பிரியம் ஆகும். அதன் தன்மை என்பது அப்பிரியம் நடுவில் நழுவாமல் நாளுக்குநாள் வளர்ச்சியுற்று இரண்டு உயிர்கட்கு ஒரு சரீரம் எனப் பலர் சொல்லப் பாலின்கண் சூக்குமமாய் நிரம்பிய சுவையைப் போல ஒன்றுபட் டிருத்தலாகும். ஒருவரிடம் சிநேகிப்பதற்கு முன்னமே, "மனநலம், பொறுமை, அடக்கம், கல்வியறிவு, தெய்வ வழிபாடு, எவ்விஷயங்களிலும் நுட்பமாகவே செல்லுந் தீவிரம், குணத்தையே கைக்கொள்ளும் சமரசபாவனை, இவைபோன்ற பலவும் அவர் கொண்டுள்ளாரா?" என்பதைத் தீர்க்கமாகத் தெரிந்து கொண்டு பின்பே நெருங்கிப் பழகுதல்வேண்டும். இப்படித் தெரிந்து பழகிக்கொண்டு வருவதில் ஒருவருக்கொருவர் கபடக் கருத்தை வைத்துக்கொண்டிருப்பின் அது முடிவில் தலைக்குக் கல்லாய் வந்து சேர்தலோடு ஆதியில் உள்ள கௌரவமுங் கெட்டுப் பலா பழிக்கவும் இடமாய் விடுகின்றது. அன்றி, சிநேகத்திற் செய்து வருகின்ற சூதானகாரியங்களை நீக்கிக்கொள்ளத் தீர்த்தம் ஆடல், மூர்த்தி தரிசனம் முதலியன செய்யினும் அது இலேசில் தீராதென்பது நமது ஞானநூல்களின் வரையறையாகும். நமது முன்னோர்களிற் பலர் சிநேகத்தில் வேறுபடாத மனத்துடன், மலரும் மணமும்போல் இருந்தார்களென்பதைப் பழைய சரித்திரவாயிலாக நாம் காண்கின்றோம். பாண்டிநாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரிலிருந்த பிசிராந்தையார் என்பவர் கோப்பெருஞ்சோழன் யாவற்றையுந் துறந்து உயிர் விட்டனனெனக்கேட்டுத் தாமும் உடனே இறந்தாரென்பதாகத் திருக்குறட்கு உரைகண்ட ஆசிரியர் பரிமேலழகியார் கூறிவைத்திருக்கின்றனர்.

சிநேகிக்கும் இருவர்களது மனமும் ஒற்றுமைப்பட்டே கிடப்பதற்கு உண்மையுணர்ச்சியென்பதொன்று அவரவர்களிடத்தில் வேரூன்றிக்கிடத்தல் வேண்டும். ஒருவரா லொருவர் லாபம் பெற நினைத்துச் சிநேகஞ்செய்துகொள்ளுத லெல்லாம் சிநேகமாகாது. அது சமயத்துக்குத் தக்கபடி பேசிக்கொள்ளுகின்ற "வியாபார சிநேக"மெனவே பெயர்பெறும். சிநேகர் இருவருக்குள் ஒருவர் முதுமையிற் பழுத்து மனக்கொதிப்பால் காரணமின்றி மடமடவென்னப

பேசிவிடினும் மற்றொருவர் அவைகளை ஒருபொருட்படுத்தாது நிரம்பிய பொறுமையோடு இருந்துவிடுவாராயின், வேறுபடப் பேசியமுன்னோர் தாமே கருத்தழிந்து "யாம் சிறிதுநேரத்துக்கு முன் தவறுதலாகப் பேசநேர்ந்ததே" எனத் துக்கிப்பர்.

பலர் கூடியிருக்கின்ற சபையில் வஸ்திரங் குலைந்தவனுக்கு அது குலைந்த அப்பொழுதே கையானது மனத்தினும் முற்பட்டு விரைந்துசென்று குலைந்த வஸ்திரத்தை எவ்வாறு கட்டுகின்றதோ, அவ்வாறே சிநேகிதனுக்குத் துன்பம் நேரிட்டவிடத்து நேரிட்டவப்பொழுதே மனதிலும் விரைந்துசென்று உதவிசெய்து அத்துன்பத்தை யொழிப்பதுதான் சிநேகத்துக்கு லக்ஷணமென்க. அன்றிச் சிநேகிதனைத் தீயவழிகளினின்றும் விலக்கி நல்லவழியிற் செலுத்தி விதிவயத்தாற் கேடு வந்தவிடத்து அதனை உடனிருந்து அநுபவித்தலும் வேண்டும். ஒருவரைப்பற்றி யொருவர் முன்னிலையிற் சிறப்பித்துச் சொல்லிக்கொள்ளுதல் சிநேகம் ஆகாது. இருவர்களில் யாதாயினுங் குற்றங்குறைகள் ஒருவரிடத்துக்கண்டபோது அவற்றை மனதில் வைக்காமல் வெளிவிட்டுச்சொல்லிக் கண்டித்துப் புத்திபுகட்டி மனதை ஒற்றுமைப்படுத்திக் கொள்ளுதல் சிநேக முறைமையாகும். எப்பொழுதும் அகமும் முகமும் மலர்ந்த சிநேகந்தான் மலைவிளக்கென வளர்ந்தோங்குவ தாகும். உள்ளொன்றும் வெளியொன்றுமாகப் பேசிக்கொண்டு நடித்தலெல்லாம் ஒரு பிரயோசனமு மில்லாமல் வாய் ஆவிபோக்குதலேயாம். சிநேகஞ் செய்வதற்குமுன்னமே, ஒருவருடைய தகுதி முதலியவற்றை ஆராய்ச்சி செய்யவேண்டுமென்பதாக முன்னர் விளக்கிக் காட்டியிருக்கின்றோம்.

தமது சிநேகருக்குத் தம்மால் ஆகின்ற காரியத்தை ஆகாததாக நடித்துக் காட்டுபவரது சிநேகத்தை அவருக்குச் சொல்லாமலே விடல் வேண்டுமென்ற கருத்தமைய,

> ஒல்லுங் கருமம் உடற்றுபவர் கேண்மை
> சொல்லாடார் சோர விடல்.

என, நாவலர்பெருமான் அருளியதும் இங்குக் கவனிக்கத்தக்கதாகும். நம்மவர்களிற் சிலர் ஒருவரைச் சிநேகித்தபின், தனியிடங்

களிற் காண் நேரின் நேசம்பாராட்டியே பேசலும், பத்துப்பேர் கூடியசபையில் பேச நேர்ந்தால் ஒருவிதமாக அகௌரவப் படுத்தியே பேசலையும் நாம் காண்கின்றோம். இதனைப் பெறப் போவது இன்னதென அன்னார் தெரிந்திருப்பின் இச்செயலைச் செய்யவேமாட்டார்கள். இவ்விதமான சிநேகங்களைப் பற்றற வொழித்துத் தலை முழுக வேண்டும்.

"இணக்கமறிந்திணங்கு" என்று முன்னர்க் கூறியதற்கேற்பப் பின்னர் "கூடிப்பிரியேல்" என்றருளிய ஔவையார் எவ்வளவு பெரும் பொருள்களை எவ்வளவு சிறு வாக்கியங்களில் முடித்துக் காட்டி வைத்திருக்கின்றனர்! இவற்றால் சிநேகிக்குங் காலத்தில் அறிந்து சிநேகித்தல் வேண்டுமென்றும், அப்படிச் சிநேகித்துக் கூடியபின் பிரியாதிருக்க வேண்டுமென்றும் யூகிக்கப்படுகின்றன. பலவித காரணங்களால் அவரவர்கள் சிநேகத்தை நீக்கிக்கொள்ளுங் காலத்தில், ஒற்றுமைப்பட்டிருந்தபோது அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தவற்றை யெல்லாம் ஒருவர்மேலொருவர் குற்றமாகக் கடைவிரித்துக்கொண்டிருக்கும் வழக்கம் நம்மவர்களிற் சிலரிடமுண்டு. அவ்வழக்கம் இவர்கள் கண்டுங்காணாமற் சொல்லிக்கொள்வதையெல்லாம் பக்கத்துள்ளார் கேட்டுப் பரிகசித்துச் சிரிக்க ஒரு மூலகாரணமாய் நிற்கின்றது. இதற்கு யாதொரு வழியாலும் பிராயச்சித்தமேயில்லை யென்பதாக நமது சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சங்கக் காலத்திருந்த நல்லிசைப் புலவர்கள் பாடிய நாலடியில்,

"ஆற்றுந் துணையும் பொறுக்க. பொறானாயின்
தூற்றாதே தூர விடல்."

என்று கண்டிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. சிநேகம் முற்று ஒழிந்தபின் தூற்றிக்கொண்டிருக்காமல் தூரத்தள்ளல் வேண்டுவது முக்கியமாகும். இதுவரையில் சொல்லியவற்றால் ஒருவரிடம்சிநேகிப்பதற்கு முன்னமே குணஞ்செயல்க ளாதியவைகளைத் தீர்க்கமாகத் தெரிந்து சிநேகித்தல் வேண்டுமெனவும், அப்படிச் சிநேகித்தபின் எப்பொழுதும் மனமொற்றுமைப் பட்டேயிருத்தல் வேண்டுமெனவும், சிநேகத்துக்குள் சூது செய்தல் அதிபாதகமெனவும், சகித்தற்கரிய பலதீச்செயல்களால் பிரிய நேர்ந்தவிடத்து இரகசியமாக முன்னர் பேசிக்கொண்ட செய்திகளைத் தூற்றுதல் கூடாத காரியமெனவும், விளக்கிக் காட்டியிருக்கின்றனவாகும்.

ரா. சா. இராமசாமிப்பிள்ளை, குன்னூர்.

மாலினீ மாதவம்.

பூர்வகதைத் தொடர்ச்சி.

(123-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் முன் அத்தியாயத்தில் கூறிய விருத்தாந்தங்கள் நடந்து நான்கு மாதங்களாகின்றன. பாலூர் மஹாராஜா, தம் அருமைப் புதல்வன் தினகரன், புதல்வி மாலினீ, அபிமான புத்திரன் மாதவன் இவர்களுடனும், குறிப்பான வேலைக்காரருடனும் நமது கதையின் 'ரங்க' ஸ்தலமாகிய மணிபுரத்தில் 'வஸந்த விலாஸம்' பங்களாவில் வசித்துவருகின்றார். மணிபுரம் மஹாராஜாவின் உத்தரவுப் பிரகாரம், திவான் 'ராஜாராம்' அவர்கள், இசசிறு குடும்பத்தை எவ்வளவோ அன்பும் ஆதரவுமாய், யாதொரு குறைவுமின்றிப் பாதுகாத்து வருகின்றார். சென்னையில் வசிக்கும மணிபுரம் மஹாராஜாவுக்கும், மணிபுரத்தில் வசிக்கும் பாலூர் மஹாராஜாவுக்கும் பிரதிதினமும், பரஸ்பரம் க்ஷேம சமாசார நிரூபங்கள் சென்றுகொண்டிருக்கின்றன. நிற்க.

'இவ்வுலகில் மனிதரால் இச்சிக்கப்படும் பலவகை இன்பங்களில் முக்கியமானவை மானம், உயிர், பொருள். மனிதரில் உத்தமர்கள், பொருளினும் உயிரையும், உயிரினும் மானத்தையும் பெரிதாய்க் கருதுவார்கள். அதமர்களோ, மானத்தினும் உயிரையும், உயிரினும் பொருளையும் பாதுகாப்பார்கள். "மான மிழந்தபின் வாழாமை முன்னினிதே" என்ற பெரியோர் வாக்கியப்படி, உயர்வகுப்பிலுதித்த நமது பாலூர் மஹாராஜா, தமது நாடிழந்து, பதவியு மிழந்தது மன்னியில், தம்மைப்போன்ற மற்றொரு மஹாராஜாவின் தயவை எதிர்பார்த்து எவ்வளவு காலம ஜீவிப்பது? "ப்ரீவி கௌன்ஸில்" லுக்குப்போன 'அப்பீல்' இன்னும் முடிவாகவில்லை.' இவ்வாறு ஒவ்வொரு நாளும் தம் மனத்துள்ளதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் முள்ளின்மே லிருப்பதுபோல் அவர் காலங்கழித்து வருகின்றார். அவர் தம்முடைய மெய்க்காதலியை இழந்தபின்னும் அன்னவள் பிரதிபிம்பம்போல் விளங்கும் புதல்வியையாவது கண்ணுற்றுச் சந்தோஷி

த்து வருகின்றார். ஆயினும், இப்பொழுது நாடிழந்து தமக்குச் சமமான அன்னியரின் கைபார்த்துப் பிழைக்கும்படி நேரிட்டதை நினைக்க நினைக்க, அவ்வறப சந்தோஷமும், மேகத்தால் மறையும் சந்திர பிம்பம்போல் மறைய ஆரம்பித்தது. தம் அருமைக குழ நதைகளான தினகரனும மாலினியும, தன்னையண்டி யன்புடன் வளர்ந்துவரும் மாதவனும் அதிபாலியர்கள். உலகத்தின் அமைப் பும், மனிதர் வாழ்வினுள்ள சங்கடங்களும், அவர்க ளறியார்கள். தாங்களே தங்களைக் காப்பாற்றிக்கொளளும் நிலைமையில் அவர்களை வைத்துவிட்டாவது, இநத உலக இனப ஙகளை வெறுத்து, ஆத்மபரி காரஞ் செய்துகொண்டாவது ஏகாநதமாய் சஞ்சரிக்கலாமென்று எண்ணுவார். "தொடர்ந்து மும்மல முருக்கி வெமபவக் கடல்தொலை யக் கடநதுளோர்களும் கடப்பரோ மககள்மேல் காதல்?" நிறக.

மணிபுரம் மஹாராஜா எழுதும் ஒவ்வொரு கடிதத்திலும், விசேஷமாய், மாலினியின் யோகக்ஷேமங்களையும், அவள் விவாஹத் தைப் பறறியும், 'இம்மணிபுர ராஜ்யமே தங்களது' என்றும, 'மாலினியைத தங்கள் அந்தஸ்துக்குததகக மகாராஜனுககே மணம செய்விகக வேண்டு''மென்றும், சில கடிதங்களில் 'மாதவன் விஷயத் தில் கொஞ்சம ஜாக்கிரதையா யிருக்கவேண்டு' மென்றும் எழுதப் பட்டிருந்தன.

தன் துயரம் எவ்வளவாயினும், அனைத்தன் அருமை மைந் தாகள் இந்தப் பாலிய வயதிலேயே அறிந்து வருந்தாவண்ணம், பாலூர் மகாராஜாஅவர்களை அன்புடன் உத்ஸாகமாய் வளர்த்து வந் தார். நிறக.

பிரதிதினமும் மாலினியும்கமலாவும் பூஞ்சோலைசென்று விளையாடி வருவார்கள். மாதவனும தினகரனும் "ஐவர்மலை" ச சார்பு சென்று வேட்டையாடியும உயர்ந்தவிருக்ஷங்களையும், அருவிகளையும், குகை களையும், பலவிதப் பக்ஷிகளையும் இன்னும் அங்குள்ள நாநாவிதமான இயற்கை யற்புதங்களையும் கண்டு களித்தும் திரும்புவார்கள்.

இந்நிலைமையில் வஸந்தகாலமும் நெருங்கியது. நமது கதா தினத்துக்குச் சுமார் ஒருவாரத்துக்கு முன், நமது மாதவனும் தினகரனும் "ஐவர்மலை" யருவியொனறின கரையோரமாய் உடகா

ர்கது, அவ்வருவியின் தெள்ளிய நீரானது ஸ்படிகம்போல் ஒளிவீசும சிறு பருக்கைக் கற்களின்மீது பாய்ந்தோடும் அழகை யுற்று நோக்கி ஆனந்தித்துக்கொண்டிருக்கையில், நாம முன் கூறிய பரதேசி, அவர்கள்முன் ப்ரத்யக்ஷமாய்,

“சிறுவர்களே! நீங்கள் ராஜகுமாரர்களைப் போல விளங்குகின்றீர்களே?” என்று வினவ,

மாதவன்:—“ஸ்வாமி! எனது நண்பன் ராஜகுமாரன், தான் நான்—”

பரதேசி:—“குழந்தாய்! நீ குழந்தைதான்.—உன் முகத்தில் ராஜலக்ஷணங்கள் தோன்றுகின்றன. தர்மமே நிச்சயம்—(தினகரனை நோக்கி) அப்பா! நீ பாலூர் ராஜபுத்திரனல்லவா? உன் சகோதரி மாலினீ சௌக்கியமாயிருக்கின்றாளா? மாதவனும் நீங்களும், இதுவரை இருந்ததுபோல் இனியும எப்போதும் அன்பாயிருங்கள். உங்களுக்கு ஒரு குறைவும் வராது. “தர்மமே ஜயம்” என்றார்.

“இவ்வளவு வரை தங்கள் குடும்ப ரகஸ்யங்களை யறிந்த இம் மஹானுபாவர் யாராய் இருக்கலாம?” என்று மாதவனும், தினகரனும அவர் முகத்தை யுற்றுநோக்கி ஆலோசித்துக்கொண்டிருக்கையில், பரதேசி இரும்பு வளையங்கள் கோக்கப்பட்ட தன் ‘சோட்டா’த் தடியால் தரையை ‘கல்’, ‘கல்’ என்று சத்தமிட்டுத் தட்டிக்கொண்டும் “தர்மமே நிச்சயம்!” “தர்மமே நிச்சயம்!” என்று கோஷித்துக் கொண்டும் ஆங்கோர் புதருக்குள் மறைந்தார்.

4-வது அத்தியாயம்.

இப்பொழுது இதுவரை செய்துவந்த பூர்வ கதா ப்ரஸங்கங்களை நிறுத்திவிட்டுச் சற்று நமது கதா நிகழ்ச்சியை யனுஸரிப்போம்:

மெய்க்காதலின் மிகுதியால், நமது கதா நாயகர்கள் மெய்மறந்து ஆனந்த பரவசர்களாயிருந்தனரென்றும், அந்நிலையில் தற்செயலாய்த் தினகரன் அவர்களைப் பார்க்க நேர்ந்ததென்றும, அப்போ

மூது கோபாவேசத்தால் தினகரன் மாதவனைப் பலவாறு நிந்தித்துச் சென்றான் என்றும் நாம் முன்னொரு அத்தியாயத்தில் கூறினோமல்லவா?

‘வஸந்த விலாஸம்’ பங்களாவின் மேல்மாடியில், சுற்றிலும் வரிசையாயமைக்கப்பட்ட பலவகை பழகிய வாசனைமலர்ச் செடிகளாலும் படர் கொடிகளாலும், அலங்கரிக்கப்பட்ட ப்ராகாரங்களாலும், பல வர்ணத் தட்டிகளாலும், வெட்டிவேர் விளாமிச்சைவேர்த் தட்டிகளால் மறைக்கப்பட்ட வளைவுகளாலும், பலவிதப் பூவேலைகளுடன் கூடிய ஜப்பான் தேசத்துத் திரைகளால் மறைக்கப்பட்ட ஜன்னல்களாலும், நாற்புறச் சுவர்களிலும் மாட்டப்பட்ட உயர்ந்த “ரவிவர்மா”ப் படங்களாலும், பலவகைச் சித்திரவேலைகளுடன் நெய்யப்பட்டுத் தரையில் விரிக்கப்பட்ட ரத்ன கம்பளங்களாலும், ஊஞ்சல், ஸோபா, வில் நாற்காலிகள், கட்டில்கள், மேஜைகளாலும் அலங்கரிக்கப்பட்ட ஓர் அறையில், சுமார் 45 வயதுள்ளவரும், ஆனால் பார்ப்பதற்குச் சுமார் 60 வயதுக்குமேல் மதிக்கத் தக்கவருமான ஓர் பிரபு, ஓர் ஸோபாவில் சாய்ந்து அன்றுகாலை வந்த பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார். உடனே ஸேவகன் நுழைந்து சில தபாற் கடிதங்களைக் கொடுக்கவே, அவைகளை மேலெழுந்த வாரியாய்ப் புரட்டிக்கொண்டு வருகையில், அவர் திருஷ்டி முக்கியமான ஓர் கடிதத்தில் செல்லவே, அதையவர் பரபரப்புடன் உடைத்து, அவசரமாய் வாசித்துவிட்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கினார்.

இத்தருணத்தில், அவ்வறைக்குள் நுழையும் வாசலிலுள்ள ஜப்பான் திரை திடீரென்று முரட்டுத்தனமாய் அப்புறம் விலக்கப்பட்டது. பிரபு ஆச்சரியத்துடன் அவ்வாயிலை நோக்கவே, கோபாவேசத்துடன், தன் மீசை படபடவென்று துடிக்கத், தன் வலக்கை உடைவாளின் பிடியின்மீது நாட, எவ்வளவோ பயபக்தியுடன் செல்பவனாயினும், அப்பொழுது, ‘திட்’, ‘திட்’ என்று தரையில் காலடி வைத்துக்கொண்டு, நமது தினகரன் பிரவேசமாகி, “ஐயா!” என்று கதறிக்கொண்டு கோபவெறியுடன், அப்பிரபுவின் முன் நின்றான். இதைக் கவனித்த குணசேகரர் திடுக்கிட்டுத தன் மகனைக் கட்டிக்கொண்டு தன் பக்கத்தில் அமர்த்தி யவனைத் தன் மார்புமேல் சாய்

த்தா, உச்சி முகந்து, தினகரனைத் தடவிக்கொடுத்து தீனமான குரலுடன், "அப்பா! என் கண்மணி! தினகரா! ஏதப்பா! இவ்வளவு மனோவேதனை யடைந்திருக்கிறாய்? நீ வெகு சாந்தவானாயிற்றே, உன் உடையையும் வாளையும் பார்த்தால் ஏதோ வீரகோபத்துடன் யுத்தத்துக்குச் சென்றவன்போல் காண்கின்றாயே அப்பனே! செந்தாமரை போன்ற உன் முகம்—ஐயோ!—சோகத்தால் வாட்டமுற்றிருக்கின்றதே! அப்பா! தினகர! என்ன நேர்ந்தது? சொல்லேன். ஐயோ! உன் நெஞ்சும் மார்பும் படபடவென்று துடிக்கின்றனவே!" என்று பரிதாபமாய் வினவினர்.

தினகரன்:—"ஐயனே! கண்டேன்! கண்டேன்!! இப்பாவி கண்களால் கண்டேன்!—" என்று பெருமூச்செறிந்து கொண்டு விம்மி விம்மி யழுதான்.

குணசேகரன்:—திடுக்கிட்டு "அப்பா! தினகர! ஐயோ! எதைக் கண்டாய்? சீக்கிரம் சொல்லேன்—ஐயோ! என்மனம் பதறுகின்றதே. அப்பா! யாருக்கு என்ன ஆபத்து நேர்ந்தது? அப்பனே! தினகரா!—

தினகரன்:—"ஐயா! மாதவன்—".

குணசேகரன்:— "ஹா! மாதவன்!— மாதவன்!! மாதவனுக்கு என்ன நேர்ந்தது?—",

தினகரன்:—"ஐயா! இம்மாதவனுடைய பூர்வ விருத்தாந்தமென்ன? அவன் தாய் தந்தையர் யாவர்?—"

குணசேகரன்:— "அப்பா! தினகர! நீ கேட்பதொன்றும் எனக்கு விளங்கவில்லையே! அவனைப்பற்றி யென்ன?"

தினகரன்:—"பால்வார்த்து வளர்ப்பினும் பாம்பு பாம்புதானே?"

குணசேகரன்:—"கண்மணி! நீ சொல்லுவது ஒன்றும் துலங்கவில்லையே! என்மனம் பதறுகின்றதே!"

தினகரன்:—"ஐயனே! உண்ட வீட்டுக்கிரண்டு நினைந்த இச் சண்டாளத் துரோகி—இம்மாதவன்—".

குணசேகரன்:—"ஹா! ".

தினகரன்:— தாய் தந்தையர் பேர்கூட அறியாத எந்த இழி குலத்தில பிறந்தவனோ?— அப்பாதகன்.—"

குணசேகரன்:—கண்மணி! தினகர!—"

தினகரன்:—ஐயோ! என் வயிறு எரிகின்றதே! இப்பாவி கண்களால் பார்க்கவும் நேர்ந்ததே! "

குணசேகரன்:—"அப்பா! என்ன நடந்தது? சொல்—"

தினகரன்:—ராஜகுலத்துதித்த என் சகோதரி—ஐயோ! என் மனம் துடிக்கின்றதே! அடி மாலினீ! ஐயோ! பெண்களெல்லாம் பேதையர் தானோ?"

குணசேகரன்:—"தினகர!—"

தினகரன்:—"ஐயோ! இப்பாவி, நமது குழந்தை—ஒன்றுமறியாத குழந்தை—மாலினியை, மோஹவலையால் மயக்கி—ஐயோ! மாலினீ! மாலினீ! அம்மா! 'என்னவெல்லாம் நினைத்தோமடீ! ஐயோ நாடிழந்து, பேரிழந்து தவிப்பதுகூடப் பெரிதாகத் தோன்றவில்லையே!' அம்மா மாலினீ! உன் தலைவிதியு மிதுதானோ!!" என்று கோவென்று கதறிக்கொண்டு தன் தகப்பன் மேல் சாய்ந்தான்.

குணசேகரன்:—(அடங்காத்துயரத்தில் ஆழ்ந்தப்பட்டவனாய் கண்களில் கண்ணீர் ததும்ப, தன் அநுபவமெனும் சாதனத்தால் துக்கத்தை அடிக்கடி அடக்கிக்கொண்டு தன் புதல்வனுக்கு ஆறுதல் கூறி) "அப்பா! தினகர! நீயொன்றுக்கும் வருத்தப்படாதே. மாலினீ குழந்தைதானே?—ஏதோ தெரியாப்புத்தி. இனியவளுக்கு விவாகத்தை நடத்திவிடவேண்டும் தாமதிக்காமல்—"

தினகரன்:—"குலங் கோத்ரம் தெரியா இத்துரோகிக்கா?"

குணசேகரன்:—அப்படியல்ல. அவள் மனதுக்கிசைந்த மணவாளனுக்கு—"

தினகரன்:—" ஐயனே! ஏது! உயர்குலத்துதித்த தங்கள் பெருமையெலாம் மறந்துவிட்டீர்களோ? அவள் மனபபடி விடுவோமாகில், இப்பாதகன் வலையிலகப்பட்டவள் வேறே எவரை

வரிக்கப்போகின்றீர்? ஈசுவரா! இதுவும் உன் செயலோ!" என்று முகத்தில் கைவைத்து விம்மிவிம்மி யழுதாள்.

குணசேகரன்:—"தினகரா!"

தினகரன்:—ஐயனே! வேண்டாம்! வேண்டாம்! இப்பொழுதே உத்திரவுகொடுங்கள், இம்மாதவனை இக்கத்திக்கிரையாக்கி விருகின்றேன். என் உயிர் போனாலும் பாதகமில்லை. மானமழிந்த பின் வாழ்வதெப்படி?. அல்லது மாதவனை இப்பொழுது நமது முன் நிற்காது துரத்திவிடவேண்டும். அப்படிச் செய்யத் தாம் உடன்படாவிடில், நானாவது, இனி இப்பாவத்தைப் பார்க்காது, ஒடிப்போகின்றேன். இவ்வகண்ட உலகத்தில், இச்சிறு வயிற்றைநிரப்ப என்னால் முடியாதா?"

குணசேகரன்:—அப்பா! நீஅவ்வளவு பதறாதே. மாதவனுக்கு, நமக்குச் சரிசமானமாய் இடங்கொடுத்தது நம்மேல் தவறு. இனி நொந்துகொள்வதில் பயனென்ன?. அவனை இனிநம்முன் வரவழைக்காமல், அலக்ஷியமாயிருப்போமாகில் அவனே போய்விடுவான். நாம் வாயால் சொல்லுவதைக் காட்டிலும் செய்கையால் நம் அதிருப்தியைத் தெரிவித்துவிடுவோம்" என்று சொல்ல, தினகரன் முகம் சற்று மலர்ச்சியடைந்தான். உடனே குணசேகரர் தான் பார்த்துக்கொண்டிருந்த கடிதத்தைத் தினகரன் கையில் கொடுத்தார். அதின் ஓர் பாகம் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

" ... ...

மேலும் என் அன்பான தமயனும், அவர் மனைவியும் காலஞ்சென்ற பிறகு இவ்வில்லறத்தையே முற்றிலும் துறந்து எத்தனையோ நண்பர் முயன்றும், காதலென்னும் வலைக்குட்படாது தப்பி வந்த என்மனம், அழகில் சிறந்த தமது மாலினி—என் துணிவைத் தாங்கள் பொறுத்தருள வேண்டும்.—மாலினியின் வினயம், குணம், அழகு என்னும் சிறந்த குணங்களால் என்மனமானது மறுபடி இவ்வுலகத்தை நாடுகின்றது. அவளன்றி வேறு எதுவும் என் மனத்தையணுவும் அசைக்காது. அவளை விவாஹம் செய்து கொள்ள எக்காரணத்தாலாகிலும் நேரிடாவிட்டால், இவ்வுலக இன்பமே எனக்கு

வேண்டாம். மெய்க் காதலென்பது கேவலம் பிருக ப்ராயமான விஷயசுகம் மாத்திரமன்று. என் நாடு நகரெலாம் தமது என் உயிரும் உடலும் தமதே. என் நாட்டுக்கு, எனக்குப்பின் 'வாரிஸ்' ஏற்பட்டு இவ்வம்சம் நிலைத்தோங்க வேண்டுமென்று தாங்கள் கருதுவது உண்மையாகில என்மனம் குளிரச் செய்வீர்களென்று விரும்பி எதிர்பார்க்கிற

தமது நண்பன்

கிருஷ்ண ராஜன்"

* * * * * *

சோலையினின்றும் திரும்பிவந்த மாதவன் மன வேதனையுடன் 'வஸந்தவிலாஸ'த்தில் தன் அறைக்குட் பிரவேசித்துத் தான் அணிந்திருந்த மேலுடையையும், உடைவாளையும் பரபரப்புடன் கழற்றி இரண்டுகைகளாலும் சுருட்டிச்சுழற்றி வெறுப்புடன் ஆங்கோர் மூலையில் எறிந்து விட்டு, 'அம்மா!' என்று அலறிக்கொண்டு ஓர் சோபாவில் சாய்ந்து தனது இடது கைத்தலத்தால் தன் நெற்றியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு பலவாறு சிந்திக்கலானான். நிர்மலமான ஆகாயத்தின்கண் மேகவரிசைகள் செல்வதுபோல, அவன் செந்தாமரைபோன்றவதனம் சோகத்தாலும் எண்ணிறந்த சிந்தைகளாலும் வாட்டமுற்றது. "அம்மா! ஐயோ! என் நிலைமையை இன்றுதான் நான் உணர்ந்தேன். தாய் தந்தையரை இழந்த சோகம் அன்று நான் அறிந்திலேன். இன்றுதான் அவர்கள் என்னை இவ்வாறு தியங்கவிட்டுச் சென்றார்களோ? ஐயோ! என்ன செய்வதென்று ஒன்றும் புலப்படவில்லையே" என்று பலவாறு சிந்தித்துக்கொண்டும் அடிக்கடி பெருமூச்சு விட்டுக்கொண்டும் மன வேதனையுடனிருந்தான். இந்நிலைமையில், அவ்வறைக் கதவு திடீரென்று திறக்கப்பட்டது. உடனே அவ்வரண்மனை 'ஸம்பிரதி' பிரவேசமாகி, அலக்ஷியமாய் 'ஓய் மாதவ! —' என்றழைக்கவே, மாதவன் திடுக்கிட்டு அவனைப் பார்த்து, இதுவரை "சின்னதுரைகளே!" யென்று எவ்வளவோ மரியாதையுடனும் பயபக்தியுடனும் அழைக்கும் ஸம்பிரதி இவ்வாறு அலக்ஷியமாய் அழைப்பதைப் பார்த்து, 'ஆ! கால விபரீதமாயிருக்கிறது' என்று உணர்ந்து ஸம்பிரதி

என்ன விசேஷம்? என்ன இவ்வளவு அவஸரம்? " என்று வினவினான்.

ஸம்பரதி:—'மாதவா! உமக்கு ஸ்நானத்துக்கு வேண்டிய முதலானவைகள் இவ்வறையின் தெற்குத் தாழ்வாரத்தில், வைக்கப்பட்டிருக்கின்றன. சௌகரியப்படி செய்கிறது. உமக்குப் போஜனம முதலானவைகள் இவ்வறைக்கே கொண்டுவரபபடும்.—'

மாதவன்:—"(திடுக்கிட்டு) ஆனல் நான் போஜனசாலை—"

ஸம்பரதி:—"ஐயா! ஏதோ அவ்விதம் மஹாராஜா அவர்களின் உத்தரவு—"

மாதவன்:—"அவ்வாறு திடீரென்று உத்தரவானதற்குக் காரணம் நான அறியலாமோ?—"

ஸம்பரதி:—'அதெல்லாம் எனக்குத் தெரியமாட்டாது. எனக்கிட்ட கட்டளையை நான் தெரிவித்தாய்விட்டது. அப்புறம் உம திஷ்டம்—'

மாதவன்:—"ஆனல் நான் இவ்வறையைவிட்டுக்கூட வெளியே போக லாகாதோ?—"

ஸம்பரதி:—"அது உமதிஷ்டம்—" என்று அலக்ஷ்யமாய்ச் சொல்லிவிட்டு மாதவனுடைய அடுத்த கேள்விக்கு இடங்கொடாமல் திடீரென்று வெளியேறிவிட்டான்.

அப்பொழுது மாதவனுடைய நிலைமையையும் மனோவேதனையையும், எண்ணிறந்த கவலைகளையும்பற்றி நமது நண்பர்களே ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். இஃதிவ்வாறிருக்க, அந்தப்புரத்தில், நமது பாலூர மஹாராஜா குணசேகரன் ஓர் சாய்பு நாற்காலியில் சாய்ந்துகொண்டிருக்கின்றார். அவர் அருகில் அந்நாற்காலியின் பின் சாய்பின்மேல் தனது இடதுகையை வைத்துக்கொண்டும், தனது வலது கைவிரல்களால் படபடவென்று துடிக்கும் தன் இள மீசையைமுறுக்கிக் நெறுநெறுவென்று பற்களால் கடித்துக்கொண்டும், கோபாவேசத்துடன் தினகரன் நிற்கின்றான். எதிரில் மாலினி தன் இருகைத் தலங்களாலும் தன் முகத்தை மூடிக்கொண்டு கண்ணும் கண்ணீருமாய் நிற்கின்றாள். ஆங்கோர் மூலையில் கமலாம்பகமொன்றும் செய்யத் துணியாமல், சித்திரப்பதுமைபோல அடங்

ி பொடுங்கி 'என்ன நேரிடுமோ?' என்று பதறிக்கொண்டு நிற்கின்றான். இந்தக்காலத்தில் எல்லாம் மௌனமாயிருந்து கடைசியாய் குணசேகரர் "மாலினீ! நீ எவ்வளவோ புத்திசாலியென்று நான நினைத்திருக்க—என் கஷ்டகாலம் பொருளை யிழந்தும், பதவியை யிழந்தும், நீங்களாவது நல்ல நிலைமையிலிருக்கக் கண்டு களிக்கலாமென்று நான் இருக்க—"

தினகரன்:—"அப்பாதகன்—அக்கொடிய துரோகி—ஐயோ! என் வயிறு எரிகிறதே—நம் அந்தஸ்தெங்கே? பதவியெங்கே? அச் சண்டாளனால் நமக்கு மானக்கேடும் நேரலாயிற்றே! வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல—அத்துரோகி—"

குணசேகரன்:—மாலினீ! அம்மா! கண்மணி! உன்னைப்பெற்றவள் இருந்தால், இதைக்கண்டு, தன் பிராணனைத் துறந்துவிடுவாளே! அம்மா! கண்மணி! ஏதம்மா! உனக்கிப்படிப் புத்தி போயிற்று? ஐயோ! என்மனம் சகிக்கவில்லையே— கண்மணி! போனதுபோகட்டும் இதுவரை யாதொன்றும் கல்மிஷமாய் ஏற்படவில்லையென்று தோன்றுகின்றது. இதுவரை நடந்தது வெளிப்படவேண்டாம். இனிமேலாயது அவனுடன் நெருங்கிப் பழகாமல் அலக்ஷியமாய்—இருந்தால்,—

தினகரன் பற்களை 'நறநற' வென்று கடித்துக்கொண்டு உதடுகள் துடிக்கத் தன் வலக்கை உடைவாளின் மீது நாட, "இனி இவ்வாறு இக்கண்களால் பார்க்க நேரிட்டால், அப்பாதகனை இக் கத்தியால் துண்டிப்பதுமல்லாமல்—"என்று சொல்லிக்கொண்டு உடைவாளை உருவி வெட்டவெளியில் வீராவேசத்துடன் ஒரு சுழற்றுச் சுழற்றினான்.

குணசேகரர் தன் புதல்வனுடைய வீரவெறியைக் கண்டு சற்றுப்பயந்து, இனி இச்சம்பாஷணையை வளர்த்தல் புத்தியீனமென்றுணர்ந்து "மாலினீ! கமலா! ஜாக்ரதை, புத்திசாலிகளாய் இருங்கள்" என்று தீனமான குரலுடன் உபதேசித்துவிட்டு, தினகரனுடன் தன் 'தர்பார்' அறைக்குச் சென்றார். அதுமுதல், மாதவனுக்கு வேறு சாப்பாடு படுக்கை முதலியன ஏற்பட்டுவந்தன. அவ்வரண்மனையில், யாவரோடும் பேசாமல் தனியேயிருந்து அவன் காலம் கழித்துவந்தான். இவ்வாறு இரண்டுமாதங்கள் கழிந்தன.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B. A., B. L.

* நீத்தார் பெருமை.

"நீத்தார் பெருமை" என்பது முற்றத் துறந்த முனிவரது பெருமை ஆகும். அறம் முதலாகிய பொருள்களை உள்ளவாறு உலகத்தில் கூறுவிப்பார் நீத்தாரே யாதலால், வான் சிறப்பின் பின் நீத்தார் பெருமை வைக்கப்பட்டதாகும். இது சாலப்பொருந்தியதாமென்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கும். ஆ! திருவள்ளுவனாரின் தெய்வப் புலமையென்னும் ஆற்றலை என்னென்பேன்!

இனி, நீத்தாரெனப்படுவார், "தத்தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே ஒரு சிறிதுகாலம் நின்று, பின் துறவுநிலை யெய்தியவரே என்றும், இவ்வுலகத்துப் பெருமைகள் பலவற்றுள்ளும் அவர் பெருமையே மேலானதென்றும், மறை முதலான நூல்கள் கூறுவதும் அவரையே என்றும்;

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு."

என்று நாயனார் அருளிய திருக்குறட்பாவினால் தெளிவாகின்றது. நிற்க.

"நீத்தார் பெருமை" யென்னாது, "ஒழுக்கத்து நீத்தார் பெருமை" எனக் கூறியிருப்பதைப்பற்றிச் சற்று யோசிப்பாம்: நூலாசிரியர் கருத்தை ஒரு சிறிதும் பிசகாது உரைக்கும் பேராற்றலுடைய உரையாசிரியர் பரிமேலழகியார் கூறுகிறபடி, யாரும் தத்தமக்குரிய வருணத்திலும் நிலையிலும் வழுவாதொழுக அறம் வளரும். அறம் வளரப் பாவந் தேயும். பாவந் தேய அறியாமை நீங்கும். அறியாமை நீங்கவே நித்திய அநித்தியங்களது வேறுபாட்டுணர்வும், அழிதன் மாலையவாய இம்மை மறுமை யின்பங்களின் உவர்ப்பும், பிறவித்துன்பங்களுந் தோன்றும். தோன்றவே வீட்டின்கண் ஆசையுண்டாம். அஃதுண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்றாகிய "எனது" என்பதும் அகப்பற்றாகிய "யான்" என்பதும் விடும். ஆதலான், இவ்விரண்டு பற்றையும் இம்முறையே வெறுத்துவிடுதலே ஒழுக்கத்துநின்று துறவற மெய்தியதாமெனக் கொள்க.

---

* இது 27-8-11ல் கூடிய "காந்திமதித் தமிழ்ச்சங்கத்தில் கனம் அ. கணபதிபிள்ளையவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஆக்கியோரால் படிக்கப்பெற்றது.

துறவறமென்பது நாமே உண்டுபண்ணிக்கொள்ளும் ஒரு நிலையென்பதில்லை. தானே உண்டாகும் ஒரு பக்குவநிலை என்பது பெற்றாம். பூவாகிப் பின்முறையே பழமாகவேண்டுமேயன்றி திடீரெனப் பழமாகாதென்பது வெள்ளிடைமலையே.

இனி, இத்துணைச் சிறப்புவாய்ந்த பெரியாரியலைப் பேசப்புகுபவன், இறந்தவர் தொகை எவ்வளவிற்றெனத் தெரியப் புறப்படுவான் போலாவான் என்று பொருள்படும்படி நாயனாரே,

> "துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
> திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று."

என்ற செய்யுளைக் கூறுவாராகலின் துறந்தார் பெருமையைச் சொல்லவு மெளிதோ?

இனி, "எவ்வகையார்க்கும் புகழில்லை. இருமை வகைதெரிந்து ஈண்டு அறம் புகுவார்க்கே பெருமையாம் உலகில்" என்பது தோன்ற

> "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற் றுலகு."

என்றருளுவாராயினர் அச்செந்நாப் போதாரும். இருமை வகை தெரிதலாவது:—பிறப்பு வீடு என்னும் இரண்டினும் அடைதற்குரிய இன்ப துன்பங்களை ஆராய்ந்து அப்பிறப்பை நீக்குதற்கு வேண்டிய வழிகளைத் தக்க நூலறிவினால் அறிந்து கொள்ளுதலே.

இனி துறந்தாரடையும் பயன் யாதோவெனின், அவர்கள் மோட்ச நிலத்துக்கோர் வித்தாவார். மனித யாக்கையைப் பெற்ற ஒவ்வொருவரும் பெரும்பாடு பட்டும் அடைதற்கரிய மோட்ச நிலத்துக்கே துறந்தார் வித்தாவார் என்றால் துறந்தாரடையும் பயன் வேறென்ன வேண்டும்?

இனி, இந்திரனுக்குக் கண்ணாயிரமாவது கவுதம முனிவன் ஒரு சிறு மொழியேயானால் பெருமொழி என்பாடுபடுத்தும்?

இத்தகைய பெரியாரைக் காணுமாறெவ்வாறெனில், பெரியாரென்பார் செய்தற்கரிய செய்வாராதலான் அதுகொண்டு காணப்பெறலாம். செய்தற்கரிய தென்னையெனின் இயமம், நியமம், ஆச

ணம் பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவைகளேயாம். இவை ஒவ்வொன்றையும், விரிக்கப்புகின் காலம் நீடிப்பதன்றியோர் தனி உபந்நியாசமாமென்று விரிவஞ்சி இமட்டோடு நிறுத்தி மேலே கூறத்தொடங்குவேன். இனி, "உலகானது,சுவை,ஒளி,ஊறு,ஓசை நாற்றமென்றைந்தின் வகை தெரிவான்கட்டே யாகும" என்பதில் ஐந்தின் வகையென்பதென்னை யெனப் பார்ப்பாம். ஐந்தின் வகையாவன:—அவையைந்தும், அவற்றிலே தோன்றிய பூதங்களைந்தும், அவற்றின் கூறுகிய ஞானேந்திரியங்களைந்தும், கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபதுமாம். "வகைதெரிவான்" என்றதனால் தெரிகின்ற புருடனும்,அவன் தெரிதற்குக் காரணகாரியமான அகங்காரம், மனம் எனப்பட்டவையும் அவற்றுக்கு முதலாகிய மூலப்பிரகிருதியுங் கொள்ளப்படும்.

இவ்விருபத்தைந்து தத்துவக்கூட்டமல்லது உலகென வேறில்லையென்று உலகினது இருப்பையறிதலால் அவ்வறிவினிடத்தாயிற்று. பூதமைந்து: நிலம், நீர், தீ, காற்று, வான். ஞானேந்திரியமைந்து: மெய், வாய், கண், மூக்கு, செவி. கன்மேந்திரியமைந்து: வாக்கு, பாதம, பாணி, பாயு, உபஸ்தம்—என்று மிகவுந் தெளிவாய் உரையாசிரியர் உரைத்திருப்பதாலதுபற்றி யான் சொல்லுதற்கொன்றுமில்லை.

இனி துறந்தார் ஆணை ஒரு சிறிதுந் தங்காது செய்துமுடிக்கும் ஆற்றலுடையதாம். இதுபற்றியே நாயனார்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்" என்றும்,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது" என்றும் கூறுவாராயினர்.

ஆனால், துறந்தார்க்குச் சினமெங்கிருந்து வந்ததென விரும்புவாருக்கொரு சிறிதுரைப்பல். பெரியாருக்கு வெகுளி சென்றால் பணியாத இடம ஒன்றுமில்லை. அவ்வெகுளிதான் கணப்பொழுது நிற்பினும போதும. "இந்திரனையிதுங் காத்தலரிது" என அவர் ஆற்றல்கூறி, அவ்வளவுடையாற்றலுடையராயிருந்தும் சாந்தம் முதலிய

குணக்குன்றின் முடிவின்கண் நின்றார் என அவர் பெருமை கூறிய தேயன்றி வேறு கருத்தின்றாம் என்று என சிறப்பித்துக்காட்டுகின்றது. இனி, ஒருக்கால் அவர்க்கு வெகுளி வரினும் அதுதான் நம்மை அவர் தீநெறி விலக்கி நன்னெறிப்படுத்தி ஆட்கொள்ளும் ஒருவகை அருள்வழியாய் முடியும் எனவும் தோற்றுகின்றது. அவ்வாறன்றி மனமடங்காக் கற்றார்க்குச் சினமடங்கக் கற்பது ஓர் அருமையோ? அவர் செயலெல்லாம் அருளின்பாற் படுவதன்றிச் செற்றதின்பாற் படாதென்பது அறிவித்தற்கன்றோ, மேல், நாயனார்,

"அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"

என்று முடிபு வைத்தார். இதன் கருத்து தமக்குரிய ஒழுக்கத்தின்கண்ணே நின்று, பின் தன் இயற்கையிலேயே துறவடைந்த பெரியார் எல்லாவுயிர்கள்மேலும் செவ்விய தண்ணளியை, (இரக்கத்தை, அல்லது கருணையைப்) பூண்டொழுகலான் அந்தணரென்று பாராட்டப்படுவர் என்பதன்றோ? இதனையுணராமல் வேறு சிலர் பூணூல் மார்பராய் விளங்கும் பார்ப்பன மக்களையே அந்தணரென்று வேண்டுவார். அது எமக் குடன்பாடன்று. யாம் தன்னியல்பிற் றுறவெய்தியார் எவராயிருப்பினும் அவரை அந்தணரென்று வேண்டுவேம்: தில்லை நடராசப்பெருமானோ டொன்றுபட்டு ஐக்கியமாகிய எமது நந்தன் சாம்பானை அந்தணரென்று சொல்ல யாம் ஒருசிறிதும் பின்வாங்கிடேம். (அந்தணர்—அழகிய தண்மையுடையர்.)

இத்துணைச் சிறப்புவாய்ந்த பெரியாரைக்கண்டு தரிசித்து ஆனந்தமெய்தி அவர் மொழிபோற்றிக் கடைத்தேறுதல் அவசியத்திலும் அவசியமேயன்றோ? இப்பெற்றியாரைக் காணுமிட மெதுவென உழலாது அன்னார் யாண்டும் நிறைந்திருப்பதால் அவரைக் காணப்பெறாது வறிதே, "எனக்கு ஒரு" புத்திர பாக்கியத்தை அருளல் வேண்டு"மென்றும், புத்திரர்களையுடையார் "எம்மக்களுக்கு நல்ல உத்தியோகம் அமர்ந்திடக்கடைக்கணிக்க வேண்டு"மென்றும், பெரிதும் துன்புறுத்தாது, பெறவேண்டியதைப்பெறுமாறு கடைசியில் அந்தமிலின்பத்தினில் விட்டடை அகடை

தற்கேதுவானவற்றைச் செய்யவேண்டியதே நூற்றுணிபென்பது சாரதம்.

இதுகாறும் கூறியவாற்றால் "நீத்தார் பெருமை" இன்னதென்பதூஉம், நீத்தாரென்பார் யாவரென்பதூஉம், ஒழுக்கம் என்பதென்னையென்பதூஉம், பெரியாரியலைப் பேசப்புகுவான் எதற்கொப்பாவான் என்பதூஉம், இருமை வகையறிந்தார்க்கன்றி மற்றையோருக் குலகில் பெருமையில்லென்பதூஉம், நீத்தார் அடையும் பயன் என்னையென்பதூஉம், துறந்தாரானோ எத்தன்மைத்ததென்பதூஉம், வெகுளி துறந்தார்க்கிருப்பின் என்னசெய்யுமென்பதூஉம், அந்தணரென்போர் யாவரென்பதூஉம், துறந்தாரைக்காணப்பெறின் அடையவேண்டிய தென்னவென்பதூஉம், பிறவுங் குன்றின்மேலிட்ட தீபம்போற் காணக்கிடக்கின்றதென்று கூறுமுகத்தானே நான் எனதிடஞ் செல்லுவானாயினேன்.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு."

கரந்தை முருகேசன்.

மேகஸந்தேசம்.

உத்தரமேகம்.

[௧௨௭-ம் பக்கத் தொடர்ச்சி.]

31. மேகமே! என்மீது உன்தோழி (என்காதலி)யின் மனம்மிகுந்த அன்புள்ளதென்பது எனக்குத் தெரியுமாதலால், இம் முதற்பிரிவில் அவள் நிலைமை யிவ்வாறிருக்குமென்று சொல்லுகின்றேன். (ஏதோ) இயற்கையாய்ப் பிறர் நற்குணங்களை மாத்திரம் கவனிக்கும் ஸ்வபாவமானது என்னை இவ்வாறு புகழச் செய்யவில்லை. அதிசீக்கிரம், உன் ஸஹோதரனை என்னால் சொல்லப்பட்ட எல்லா விஷயங்களையும் ப்ரத்யக்ஷமாய் நீ காணப் போகிறாய்.

32. விமயிடப் படாததால் எண்ணெய்ப் பதமேயற்ற கடைக்கண் சேஷ்டைகளெல்லாம் அளகங் (முன் உச்சிமயிர்களால்) மறைக்கப்பட்டிருக்கும்; மதுபானத்தைத் தவிர்த்திருப்பாளாதலால் 'புருவச் சிமிட்டல்'களெல்லாம் மறந்திருப்பாள். (க்ஷேமஸமாசாரம் கொண்டுவரும்) உன் வரவால் அம்மான்விழியாளின் மேல்இமை துடிக்கும்பொழுது, அக்கண்கள், மீன் துள்ளுகையில் அசையும் கருநெய்தல் மலரின் அழகுக் கொப்பானதாய் விளங்கும்.

33. (இப்பொழுது) என் நகக்கிள்ளுப் படாததும் எப்பொழுதும் அணிந்து வழக்கமான முத்துச் சல்லடத்தை இப்பொழுது விதியின் கொடுமையால் அணியாததும், ஸம்போகங்கள் செய்து முடிந்தவுடன் என் கைகளால் பிடித்துவிடத் தக்கதுமான, அவள் இடது துடையானது ஈரமான வாழைமரம்போல வெளுத்தும் (எப்பொழுதும்) துடித்துக்கொண்டும் இருக்கும்.

34. அந்நேரத்தில், ஏ மேகமே! என் காதலி, நித்திரை செய்து சுகித்துக்கொண்டிருப்பாளாகில், நீ யாதொரு கர்ஜனையும் செய்யாமல் அவள் பக்கத்தில் ஒரு யாமப்பொழுது காத்துக்கொண்டிருப்பாயாக. எவ்வளவோ சிரமப்பட்டு, தன் காதலனாகிய என்னைக் கனவிலாவது கண்டு என்னைக் காடாலிங்கனஞ் செய்வதாய்க் கனவில் நினைந்து சுகம் அனுபவித்துக்கொண்டிருக்கையில் (அவள் நித்திரையைக் கலைத்து) திடீரென்று கொடிபோன்ற அவள் கை என் கழுத்தினின்றும் வழுவும்படி செய்துவிடாதே.

35. உன்னிடத்துள்ள ஜலத்திவிலைகளால் குளிர்ச்சிபெற்ற இளந்தென்றலால் அவளை எழுப்பி, பலகணியில் தங்கியிருக்கும் உன்னைக் கண்கொட்டாமல் பார்ப்பவளும், புதிய மாலதீ மொக்குக(ளுடன்)ளால் சற்று உத்ஸாகமடைந்தவளுமான அவ்வுத்தம ஸ்த்ரீயினிடம் உன் மின்னல்களை யுள்ளடக்கிக்கொண்டு, உன் கர்ஜனை என்னும் வார்த்தைகளால் தைரியமாய்ப் பேச முயல்வாயாக.

(மேகம் தெரிவிக்கவேண்டிய ஸமாசாரங்கள்.)

---

3. "*கணவன் உயிருடன் இருக்கப்பெற்றவளே! நான் உன் கணவனுடைய ப்ரிய ஸ்நேகிதனான மேகம். அவன் (க்ஷேம) ஸமாசாரங்களை மனதில் க்ரஹித்துக்கொண்டு உன்னிடம (தெரிவிக்க) வந்தவன், நின்று அறிந்துகொள். அந்யதேச ஸஞ்சாரிகளும், வழியில் களைத்தவர்களும், ஆனால் தங்கள் காதலிகளின் சடைப்பின்னலகளை அவிழ்ப்பதில் ஆசைகொண்டவர்களுமான பதிகாகள் (யாத்திரைக்காரர்) கூட்டங்களை எனது இனிய கம்பீரமான த்வனிகளால் நான் துரிதப்படுத்துகிறவனல்லவா?"

37. நீ இவ்வாறு சொன்னதும, ஹனுமானைக்கண்ட ஸீதாதேவி போல, அவளும் உயரநோக்கி ஆவலால் மனமகிழ்ந்து (மலர்ந்து) உன்னைப்பார்த்து மரியாதையுடன் நீ இனிமேல் சொல்லப்போவதைக் கவனமாய்க் கேட்பாள். ' ஏ நண்பனே! ஸ்திரீகளுக்கு, நண்பர்களால் கொண்டுவரப்பட்ட †கணவனுடைய (க்ஷேம) ஸமாசாரம கணவனை நேரே அடைவதைப் பார்க்கிலும் கொஞ்சந் தானே குறைவானது?.

38. ஏ நற்பிறவி வாய்ந்த மேகமே! (ஆயுஷ்மன்!) என் பிரார்த்தனைப்பிரகாரமும் (பிறருக்கு உதவிசெய்நோமென்று) உன் திருப்தியின் பொருட்டும், பின்வருமாறு (என் காதலியிடம்) தெரிவிப்பாயாக. "ஏ அபலே! (பெண்ணே!) உன் காதலன் 'ராமகிரி' ஆச்ரமத்தில் வஸிக்கின்றான். உயிருடன் இருக்கின்றான். உன் பிரிவால் வருந்தி, உன் க்ஷேம ஸமாசாரம் விசாரிக்கின்றான்". சுலபமாய்க் கஷ்டதசையடைந்த மனிதர்கள் முதல் முதல் விசாரித்துக்கொள்ள வேண்டியது க்ஷேம ஸமாசாரந்தானே!"

குறிப்பு:— * அவிதவே!=விதவையாகாதவளே!=கணவன் உயிருடனிருக்கும் பாக்யம்பெற்றவளே!

குறிப்பு:— † ஸங்கமாத் கிஞ்சிதூனா=கணவன் க்ஷேம ஸமாசாரமும், கணவனை நேரய்ப்பார்ப்பதைப்போல அவ்வளவு ஸந்தோஷத்தைக் கொடுக்கத்தக்கதுதான்.

39. “வெகு தூரத்தில் வஸிப்பவனும், கொடும் பகைவனை ‘விதி’யால்(என்னைச்சேரும்) வழி மறிக்கப்பட்டவனுமான உன்காதலன், தன் மெலிந்த சரீரத்தால் உன் மெலிந்த சரீரத்தையும், தன் அடங்கா விரஹதாபத்தால் நீ படும் விரஹதாபத்தையும், தன் கண்ணீரால் நீ கண்ணீர்பெருக்கி வருந்துவதையும், ஓயாத தன் மனவேதனையால் உன் மனவேதனையையும், தன் உஷ்ணமான பெருமூச்சால், நீ பெருமூச்சு விடுவதையும்—இவ்வாறு தன் ஒவ்வொரு நிலைமையும் நினைத்து, நீயும் அவவாறே வருந்திக்கொண்டுதானேயிருப்பாயென்று மனதில பாவனைசெய்து வருந்துகின்றான்.”

40. “உன் தோழிகள் முன்னில், இரைந்துபேசக்கூடிய (படி அவ்வளவு ரஹஸ்யமில்லாத) வார்த்தையாயினும் உன் முகத்தை முத்தமிட (ஸ்பர்சிக்க) ஆசையால (ரஹஸ்யம் என்ற வ்யாஜத்தைக்கொண்டு) உன் காதோடு சொல்ல விரும்பும் உன் காதலன் இப்பொழுது காதுகளால் கேட்கமுடியாமலும், கண்களால் பார்க்கக்கூடாமலும் வெகு தூரத்திலிருப்பதால், ஆவலுடன் கூறப்பட்ட இவ்வார்த்தைகளை என் (வாய்) மூலமாய் உனக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறான்.”

யக்ஷ வசனம்.

41. “ச்யாம லதைகளால் உன் சரீரமும், திடுக்கிட்ட பெண்மான் விழிகளால் உன் பார்வைகளும், சந்திரனால் உன் வதனமும், மயில்களின் அடர்ந்த தோகைகளால் உன் கூந்தலும், நதியிலுள்ள சிறு அலைகளால் உன் புருவச் சிமிட்டல்களும் என் ஞாபகத்துக்கு வருகின்றன. (பார்க்கின்றேன்) ஐயோ! அடி (ப்ரணய) கோபங்கொள்பவளே! (இவையெல்லாம்) ஒரேஇடத்தில் உன்மாதிரி எங்கும் காணமுடியவில்லையே!”

42. “வர்ணக் காவிகளால் நீ என்மீது கோபங்கொண்டிருப்பதுபோல ஓர் சலவைக்கல் மீது (படம்) எழுதி, (உன்னைச் சமாதானம் செய்வதுபோல் நான் உன் கால்களில் வீழ்ந்துபார்ப்போம் என்று ஆசைகொண்டால், ஐயோ! அடிக்கடி பெருகும் கண்ணீரால் என் கண்கள் மறைந்துபோகின்றன. இந்த குரூரமான விதியானது தாம் அவ்வாறு கூடச் சேருவதை ஸகிக்கவில்லை.”

43. "ஐயோ! எவ்வளவோ கஷ்டப்பட்டு உன்னைக் கனவிலாவது கண்டு, உன்னை ஆவலுடன் இறுகத் தழுவுவோமென்ற ஆசையால் நான் வெறும் வெளியில் கைகளை விரிக்கும்பொழுது (என் பரிதாப நிலைமையைப் பார்க்கும் ஆங்குள்ள வனதேவதைகளின் (கண்களினின்றும்) முத்துக்கள்போன்ற ஸ்தூலமான கண்ணீர்த் திவலைகள் மரங்களின் இளந்தளிர்களில் ஏராளமாய் வீழ்கின்றன. (வனதேவதைகளில் ஒருவராவது என்னைக் கண்டு துக்கிக்காமல் இருக்கவில்லை.)"

44. "தேவதாரு விருக்ஷங்களிலுள்ள இளந் தளிர்களின் முகை (முளை) களை அப்பொழுதுதான் விரிய (வெடிக்க)ச் செய்துகொண்டும், அதிலிருந்து வடியும் பாலால் வாஸனைபெற்றதுமான ஹிமயமலைத் தென்றல்கள தெற்குநோக்கி வீசும்பொழுது, ஏ! குணவதி! "ஒருவேளை முன்னால் அவைகள உன் சரீரஸ்பர்சம் பெற்றிருக்கலாமே" யென்ற எண்ணத்தால் நான் அவைகளை ஆலிங்கனம் செய்வதுண்டு."

45. "நெடுநேரமாய் வளர்கின்ற இந்த ராத்திரிகளை க்ஷணம்போல எவ்வாறு கழிப்பது! நான் இவ்வளவு கஷ்டமடைந்திருக்கையில் பகலின் உஷ்ணம் எவ்வாறு குறைவாய்க் காணப்படும்!? ஏ! துடிக்கின்ற விழியாளே! இவ்வாறு துர்லபமானதைப் பற்றி ஆசைப்பட்டு வருந்தும் என் மனமானது உன்பிரிவால உண்டான அதி தீவிரமான துயரத்தால் (யாதொரு நிலையுமற்று) அநாதமாய்த் தவிக்கின்றது.

46. "இனிமேலாவது சுகமடையலாமென்று பெரிதாய் எண்ணி நானே என்னை தைரியப்படுத்திக்கொண்டு உயிர்த்திருக்கின்றேன். ஆகையால், ஏ! கல்யாணி! (என்மீது) அதிகக கவலைப்படாது நீயும் தைரியமாயிருப்பாயாக. எவனுக்குத்தான் சுகம் கடைசிவரை நீடித்திருந்தது? அல்லது எவன்தான துக்கமேஎப்பொழுதும் அனுபவித்தவன்? (சுழலும்) சக்கரவட்டம்போல ஒவ்வொருவன் தசையும உயர்வதும் தாழ்வதுமாகத்தானே இருக்கின்றது?"

குறிப்பு:—த்ரியாமா=இரவு. தீர்க்கயாமா=வளருங்காலம். விரஹிகளுக்கு க்ஷணகாலமும் கல்பம்போலத் தோன்றும்.

47. *"சார்ங்கபாணியான(கையில்தரித்தவரான)மஹாவிஷ்ணு புஜக (பாம்பு) சயனத்தினின்றும் எழுந்திருக்கும் தினம்வரை எனது தண்டனை (பின் அவதி) யுள்ளது. அதுவரை மீதமுள்ள நான்கு மாதங்களையும் நீ கண்களை மூடிக்கொண்டு கழித்துவிடு. அதன்பிறகு நாமிருவரும் நம்பிரிவுகாலத்தில் என்னென்ன ஆசைப்பட்டோமோ அந்த மனோரதங்களையெல்லாம் சரத்காலத்து அழகிய (முதிர்ந்த) சந்திரிகைகளுடன்கூடிய இரவுகளில் அனுபவிப்போம்?"

48. "மறுபடியும் உன் காதலன் சொன்னதாவது:—"முன்னொருநாள் என் கழுத்தை யணைந்து என்னுடன் படுக்கையில் நீ நித்திரை செய்துகொண்டிருக்கையில்ஏதோ(திடீரென்று)(தேம்பித் தேம்பி)உரக்கஅழுதுகொண்டு விழித்துக்கொண்டாய். அதன்காரணமென்னவென்று உன்னை நான் பலதடவை கேட்டபொழுது நீ மந்தகாஸத்துடன் (வெட்கி) "அடே! மோசக்காரா! நீ யாரோ ஒரு அந்நியஸ்த்ரீயுடன் ரமித்துக்கொண்டிருப்பதாய்க் கனவுகண்டேன" என்று நீ என்னைப்பார்த்துச் சொல்லியிருக்கிறாய்.".

49. ஏ! துடிக்கின்ற விழியாளே! மேற்கூறிய அடையாளத்தால் நான் க்ஷேமமா யிருப்பதாய் அறிந்துகொள். (பலரால்சொல்லப்படும்)லோகாபவாதத்தால் என்மீது அவநம்பிக்கை கொள்ளாதே. பிரியப் பிரிய அன்புகுறை (அழி)ந்து போகின்றதென்று சொல்லுவதுவழக்கம். ஆனால் (உண்மையிலோ) ஆசைப்பட்ட விஷயத்தை யனுபவிக்காவிடில் அதிலுள்ள ஆசையானது வரவர விருத்தியடைந்து ஆசை மலையாய்க் குவிந்துவிடுகின்றது.

50. இதுதான் முதற பிரிவாதலால், அடங்காத சோகத்தால் வருந்தும் உன் தோழியை இவ்வாறு சமாதானம் செய்துவிட்டு

---

* குறிப்பு:—இந்தச் சுலோகத்தினால் இதுவரை மேகம் தெரிவித்ததெல்லாம் உண்மையாய்க் கணவன் சொல்லியனுப்பியவைதானென்று தன் காதலி யறியுமாறு தங்களுக்குமாத்திரம் தெரிந்ததும் முன் ஸம்பவித்ததுமான ஓர் இரஹஸ்யத்தையும் அடையாளமாய தெரிவிக்கிறான். இவ்வாறே இராமாயணத்திலும் ராமனும், ஸீதையும் பரஸ்பரம் ஹனுமார் மூலமாய நம்பிக்கையின்பொருட்டு அடையாளமாய்ச் சில ரஹஸ்யங்கள் சொல்லியனுப்பியதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

அவளிடத்திலிருந்து ஏதாவதோர் அடையாளமும், அவள்சொல்லியனுப்பபும் க்ஷேமஸமாசாரங்களையும் க்ரஹித்துக்கொண்டு முக்கண்ண (ஞன பிரமசிவ)னுடைய விருஷபத்தால் சேதிக்கப்பட்ட கொடுமுடிகளுடன்கூடிய கைலாஸ பர்வதத்தினின்றும் உடனே திரும்பிவந்து, காலைவேளையில் ‘குந்தமலா’போல் தார்ப் பலமாயிருக்கும் எனது உயிரையும் காப்பாற்றுவாயாக.

51. ஏ! நண்பனே! இந்தச ஸிநேகிதனுக்கு (பந்து) இவ்வுபகாரத்தைச் செய்வதாய் நீ தீர்மானித்துவிட்டாயல்லவா? நீ பதிலுரைத்தால்தான் (செய்வதாய்) தீர்மானித்திருப்பதாய் நான் எண்ணப்பட்டவனல்லன். ஏனென்றால் உன்னை சாதகபக்ஷிகள் யாசிக்கையில் நீ யாதொரு சப்தமும் (பதிலும்) இல்லாமலே நீரைப் பொழிகின்றாய். நண்பர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதே நல்லோர்களின் ப்ரதிவசனமல்லவா? (நல்லோர்கள் உபகாரத்தைச் செய்து காட்டுவார்களேயொழியச் சொல்லிக்கொள்ள மாட்டார்கள்)

52. இவ்வல்ப விஷயத்தைக் குறித்து உன்னை யாசிக்கும் எனக்கு என்மேலுள்ள அன்பாலாவது அல்லது என் காதலியைப் பிரிந்து தவிக்கும் என்மீதுள்ள இரக்கமான எண்ணத்தாலாவது இச்சிறு உபகாரத்தைச் செய்துவிட்டுப் பிறகு மாரிகாலத்தால் உன் மஹிமையெல்லாம் விருத்திபெற்றவனாய் உனக்கிஷ்டமான இடங்களில் ஸஞ்சரிப்பாய். ஆனால் ஒரு க்ஷணநேரமாவது (எனனைப் போல) இப்படி (யுன் காதலியான) மின்னலைவிட்டு உனக்குவிரஹம் (பிரிவு) ஏற்படாது இருக்கக்கடவது.

மஹாகவி காளிதாஸனால் இயற்றப்பட்ட

மேகஸந்தேசம்

உத்தரமேகம்

தமிழ் மொழிபெயர்ப்பு முற்றிற்று.

குறிப்பு:—மிக்கப் பெருந்தன்மையும் சாமர்த்யமும் வாய்ந்த மேகத்தினிடம் ஸாதாரணமான தூதர்கள் மூலமாயனுப்பக்கூடிய இவ்வல்ப விஷயத்தைச்செய்யச் சொல்வது தனது பேதமையென்பதைத் தெரிவிக்கின்றான்.

அரிச்சுவடியைப் பற்றிய ஓர் ஐய வினாவிற்கு விடை.

"குண்டனூர்வாசி" யாராகிய சந்தேகியே கேண்மோ!

நும் வினாவிற் கண்ட வண்ணம், அரிச்சுவடியானது, சைவ வைஷ்ணவரான இருபாலருக்கு மட்டும் உரியனவன்று. ஏனையோர்க்கு முரியனவேயாம்.

"காப்புக்கடவுள் கண்ணனே யென்ன
யாப்புரை காலத்தி யாண்டுங்கொள்க"

என்னும் உபதேசக்கிரம சூத்திரத்தினையும்,

"காப்பு முதலிசைக்குங் கடவு டானே
பூக்கமழ் தண்டுழாய் புனைந்தவ னுமவன்
காவற் கிழமைய னுத லானும்
பூவின் கிழத்தியைப் பொருந்த லானு
முடியுங் கடகமு மொய்பூந் தாருங்
குழையு நூலுங் குருமணிப் பூணும்
அணியுஞ் செம்ம லாத லானும்
மன்னுறு பிரமனைத் தருத லானும்
முன்னுற மொழிதற் குரிய னும்மெனப்
பன்னி யுரைத்தனர் பாவலர் தாமே"

என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தினையும் உணர்ந்த அகச்சமயம், புறச்சமயம், அகப்புறச்சமயம், புறப்புறச்சமயம், ஆதிய சமயக் கொள்கைகளில் வதிந்த அறிஞர்பலரும் அரிச்சுவடிதோன்றிய நாளிலிருந்து இதுகாறும் குதர்க்கஞ்செய்திலரே! அந்தோ!

இப்பொழுது ஹரி: ந, மோ, த், து, சி, ந், த, ம்; என்பதோர் வாக்கியமாகக் காணப்படுகின்றதெனவும், அஃது அச்சுவடிக்குக் காப்பாக இருக்கலாமெனவும் ஊகித்தறிதற்குத் திறம்பெற்ற நீர், அச்சுவடியின் பெயரினை நோக்கியுணராது அதன் காப்புக்கே சந்தேகங் காட்டினகாரணம் யாதோ? அம்ம! கரந்துரை கையொப்பமிடுதல் அழகன்றும். பத்திரிகையின் வாயிலாகப் பிறிதொருநாமங் கூறிக் கல்விப்பயிலைக் காமுறல் ஏதமாம். கற்றறிஞர்பா லுற்றுக கட்டுரைப்பீ

உண்மை புணர்ந்து கோடலே முறைமையாம். "வாதுமூற் கூறேல்" எனும் திருவாக்கியத்தைச் சிந்தையில் வைத்தொழுகுதலே முறையாம். விற்க,

நம்மால் "அரிச்சுவடியைப்பற்றிய ஓர் ஐயவினு" எனக் குறிப்பிட்டதன்கீழ், இருவினுக்கள் கேட்கப் பெற்றிருத்தலால் உமக்கு அச்சுவடியில் காப்பு நீங்கிய ஏனைய எழுத்துக்களும், மற்றைச் சுவடிகளும் சந்தேகத்தைக் கொடுக்காதிருக்குமெனக் கூறுதற்குச் சாத்தியமன்றாம. ஆதலின், "அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்" எனக் கூறிநிற்கும் அரசர் மொழியைத் தழுவி நற்குருமுகமாகக் கல்வியை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து அடங்கி வாழ்வீராக. சுபம். சுபம். ஓம்.

7—9—1911.
காரைக்குடி. நா. முருகப்பசெட்டி.

அறிவிப்பு.

நமக்கு கிடைத்துள்ள புஸ்தகங்கள், பத்திரிகைகள் இவைகளைப்பற்றிய நமது அபிப்பிராயம் அடுத்த பாநுவில் வெளிவரும்.

பத்திராதிபர்.

சமாசாரக் கொத்து.

இரங்கூன் ஸ்ரீமாந். ராய்பகதூர் பெ. மா. மதுரைப்பிள்ளையவர்கள் டெல்லிதர்பாருக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

டிசம்பர் மீ தில் டெல்லியில் நடக்கும் தர்பாருக்கு நமது காருண்ய கவர்ன்மெண்டாரால் அழைக்கப்பட்டவர்களெல்லாம் மிகவும்தக்க கௌரவம் பெற்றவர்களே யென்பது பிரசித்தம். இரங்கூனில் பிரபல சீமானும், பெருங்கொடைவள்ளலும், உண்மைத் தமிழபிமானியும், பொது ஜனோபகாரியும் ஆக விளங்கும் ஸ்ரீமாந். பெ, மா. மதுரைப்பிள்ளையவர்களையும் கனம் வைசிராய் அவர்கள் பர்மா லெப்டினெண்டு கவர்னர் அவர்கள் மூலமாக அழைத்திருக்கிறார்கள் என்று தெரிய மிகவும் சந்தோஷிக்கிறோம். பிள்ளையவர்கள் இரங்கூனிலிருந்து டெல்லிக்குப் போய்வரும்வரை சகலசெலவும் கவர்ன்மெண்டாருடையதே யாகும். பிள்ளையவர்கள் பர்மாதேசத்தில் வசித்தாலும் அவர்கள் சென்னையைச் சேர்ந்தவர்களே யானதால் எத்தனை

யோ பிரபல சீமான்கள் இடங்கிடைக்காமல் நின்டாரும் இந்த தர்பார் காட்சிக்கு நமது மேன்மைதங்கிய பிரிட்டிஷ் கவர்ண்மெண்டார் பின்ஸேயவர் களைத்தெரிந்தெடுத்து அழைத்தது சென்னை ராஜதானிவாசிகட்கும் பெரிதும் கௌரவத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கின்றது. பின்லேயவர்களுடைய மேன்மையான உயர்குண விசேடங்களால் முடிவேந்தர்கள் முதல் குடித்தனக்காரர்வரை சர்வஜனங்களாலும் நன்கு மதிப்பட்டகின்ருர்கள். இவர்கள் நீடூழி வாழும்படி கடவுள் கருணைபுரிவாராக.

* * * *

உயிருடன் கொளுத்தினர்கள்:—அமெரிக்காவில், நியூயார்க் என்னும் பட்டணத்தில், சில குழப்பக்காரர் கூடி ஒரு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்து, ஒரு நீகிரோவனை அவன் படுத்திருந்த கட்டிலோடு கட்டித் தூக்கிக்கொண்டுபோய் நெருப்பில் போட்டுக் கொளுத்திவிட்டார்கள். காரணம், அந்த ஜாதியாரிடங்கொண்ட துவேஷமே.

* * * *

இரண்டரை வயதுள்ள ஓர் பிரயாணி:—அமெரிகாவிலிருந்து லண்டனுக்கு வந்த ஒரு கப்பலில், இரண்டரை வயதுள்ள ஓர் ஆண் குழந்தை பிரயாணஞ்செய்தது. அதன் தாய் தந்தையர் அக்குழந்தையை லண்டனிலுள்ள தமது தாய தந்தையரிடம் கொடுக்கும் விடும்படிக்குக் கப்பல் சீட்டு வாஙகிக் கொடுத்தார்களாம. குழந்தை குறித்த இடத்திற்குச் சுகமாய் வந்து சேர்ந்ததாம். அதன பெயர் ஜானிஸ்டார்க்லி என்று சொல்லப்படுகிறது.

* * * *

ஜெர்மன் வெள்ளிசெய்யும் விதம்:—நல்லசெம்பு 50 ராத்தல், சுத்த நாகம் 20 ராத்தல், சுத்திசெய்த வெள்ளிப் பித்தளை 10 ராத்தல் இம்மூன்றையுஞ் சேர்த்து உருக்கினல் ஜெர்மன் வெள்ளியாகும்.

* * * *

ஐம்பது அடி நீளமுள்ள இலை:—அமெரிக்காவில் உள்ள ஆமேசா என்னும் பெரிய நதிக்கரையோரங்களில் வளரும் ஓர்வித மரத்தின் இலைகளொவ்வொன்றும் 50 அடி நீளமும் 12 அடி அகலமுமுள்ளதா யிருக்கின்றது. இதிலும் பெரிய இலைகள் உலகத்தில் வேறெங்குங்கிடையா.

* * * *

ஆகாயவிமானம்:—மோரிஸிலோனே என்ற ஒரு பிரான்சிய மாது மேட்மாய் செல்லி யேடிரியு பிமயா என்ற கப்புக் (கிண்ணம்) காகப் பந்தயம் ஏற்படுத்திக்கொண்டு $2\frac{1}{2}$ மணி நேரத்தில் 143 மைல் தூரம் ஆகாய விமானத்தால் பறந்து சென்றனள்.

* * * *

இந்தியாவுக்குப் பிரயாணப்பட்டுவருகையில் அரசரும், அரசியும் ஏறி வரப்போகின்ற 'மெடினு' என்ற கப்பலை மிதக்கும் ஓர் அரண்மனையைப் போல் சிங்காரித்திருக்கிருர்கள்.

சைனாவிலுள்ள ஷாங்ஹாயில் பஞ்ச மதிகரித்து வருவதால் ஜனங்கள் மனக்கலங்கிச் செயவதறியாது கொள்ளையிட்டு வருகிறார்கள். ஹாங்கேயில் உணவுப்பொருளின் விலை யதிகரித்து வருகின்றது. அங்கு 10 நாளுக்குக்கூட உணவுப் பொருள் கிடைப்பது கஷ்டமாம்.

*   *   *   *

முப்பத்துமூன்று பிள்ளைகளை யுடையவன் :—அமெரிக்காவிலுள்ள ஒட்டேவா பட்டணத்திற் கருகேயுள்ள ஹல் நகரத்தில் வசிக்கும் குருஸ் என்னுமொருவன் 3 மனைவியர்களை மணந்து 33 பிள்ளைகளைப்பெற்றனன். அவனிறந்தபோது அவர்களுள் இறநதவர்கள்போக 24பிள்ளைகள் வந்திருந்து மரணச்சடங்கினை நிறைவேற்றினார்கள். அவர்களும் தந்தையைப்போன்று புத்திரவிருத்தியுடையவர்களாயிருக்கின்றார்கள். அவனது முதல்மனைவிக்குப் பிள்ளை 1. 2-வதுமனைவிக்குப் பிள்ளைகள் 21. மூன்றாவது மனைவிக்குப் பிள்ளைகள் 13. ஆம். இம்மூவரும் ஏககாலத்திலவனுக்கு மனைவியரா யிருந்தவர்களல்லர்.

*   *   *   *

எரிமலை :—இட்டாலியின் தென்பாரிசத்திலுள்ள சிஸிலி யென்னுந் தீவிலிருக்கும் எட்னா வென்னு மெரிமலைச்சிகரம்வெடிதது நெருப்புக்கற்களை 7 மயில் சுற்றளவு வீசுகின்றது. அதனால் அம்மலைச் சாரலிலுள்ள காடு முதலியன நாசமா மென்றஞ்சப்படுகின்றது. கடானியா வென்னும் பட்டணததுத் தெருக்கள் பெரிய வாபத்திலிருக்கின்றன.

*   *   *   *

மூடச்செயல் :—ருஷியதேசத்திலுள்ள ஓரன்பர்க் என்னும் மாகாணத்திற் பஞ்சமுண்டாகவே, அப்பஞ்சத்திற்குக் காரணம் ஆங்குள்ள ஓர் கிழவியே யென அம்மாகாணத்தவர்கள்ஒருங்குகூடித் தீர்மானித்து அக்கிழவியையடித்துக் கொலைசெய்து விட்டார்கள். இது மூடபக்தியல்ல. நாகரீகமே!

*   *   *   *

ஜலமுள்ள தாக்கைக் கண்டுபிடித்தல் :—பூமியிலுள்ள எநத விடத்தில் ஜலம் இருக்கிறதெனக் கண்டுபிடிகக திலெனர் என்ற ஓர் பிராஞ்சு சாஸ்திரி ஓர் கருவி யுண்டாக்கியிருக்கிறார். அந்தக் கருவியுடன் சிறிய சப்தத்தைப் பெருக்கிக்காட்டும் வேறோர் கருவியை இணைத்துப் பூமியில் செருகிவைத்தால் தரையின்கீழ் ஓடும் ஜலததின் இரைச்சல் பலமடங்கு பலமாய்க்கேட்கும். ஜலம் இல்லாவிட்டால் ஒன்றும் கேட்காது. இதைக் கண்டு ஜலம் அகப்படக்கூடியஸ்தலம் அறிந்து சாதாரண கிணறாவது, குளம் திரக்கிணறாவது வெட்டலாம். இக்கருவி உபயோகத்துக்கு வருமாகில் குடியானவர்களுக்கு மிகவும் பிரயோஜனமாயிருக்கும்.

பத்திராதிபர்.

Advertisement.

உ

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்
விற்பனைக்குத் தயாராயிருக்கும்

அருமையான தமிழ்ப் புஸ்தகங்கள்

தனிச்செய்யுட் சிந்தாமணி 182 வித்துவான்கள் பாடிய 3815பாடல்கள்	ரூ.	3— 0—0
சிவஞானபாஷ்யம்		1— 4—0
பழநிமாம்பழக்கவிச்சிங்க நாவலர் பிரபந்தத்திரட்டு		2— 8—0
கம்பராமாயணம் ஆரண்யகாண்டம் மூலமும உரையும்		3— 8—0
திருக்குற்றாலத்தலபுராணம் செய்யுள் (அரும்பதவுரையுடன்)		1— 8—0
திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு (அரும்பதவுரையுடன்)		1— 8—0
திருக்குறள் பரிமேழகருரையுடன (பாக்கட் சயிஸ்)		1— 0—0
திருவாப்பனூர்ப்புராணம்		1— 0—0
அரிமழத்தலபுராணம்		1— 4—0
திருக்குற்றாலத்தலபுராணம் (வசனம்)		0—12—0
குலோத்துங்கசோழன் கோவை (அரும்பதவுரையுடன்)		0—12—0
குமணசரித்திரம் ஷை		0— 8—0
ஸ்ரீவான்மீகி இராமாயண சருக்கார்த்த சங்கிரகம்		0— 8—0
மாண்டவன் மீண்டமாயம் (ஓர் துப்பறியும் தமிழ் நாவல்)		0— 8—0
கன்னியாகுமரித்தலபுராணம் வசனமும், செய்யுளும		1— 0—0
சித்தாந்தஞானரத்நாவளி		0— 6—0
சாவஞானோத்தரம்		0— 1—0
லாலா லஜபதிராய் சரித்திரம் (படத்துடன்)		0— 2—0
திருவுருமாமலைச்சிலேடைவெண்பா		0— 2—0
மூவகையான்மாக்களினிலக்கணம்		0— 1—0
பரப்பிரம்மவிளக்கம்		0— 1—0
கைக்குவார் மஹாராஜா அவர்கள் மஹோபந்நியாசம் தமிழ் மொழிபெயர்ப்பு படத்துடன்		0— 2—0
மாலைமாற்றுமாலை மூலமும்உரையும்		0— 8—0
சந்நியாசிகீதமும் பராதஜாதிய கீதமும்		0— 2—0
சேதுபர்வதவர்த்தனியம்மைபிள்ளைத்தமிழ்		0— 4—0
அத்துவிதவாக்கியத்தெளிவுரை		0— 4—0
திருச்செந்தூர்க்கலம்பகம		0— 3—0
அட்டாங்கயோகக்குறள		0— 2—0
பாரதம் (தமிழ்ச்சங்கம் பதிப்பு)		3— 0—0
வைத்தியசார சங்கிரகம் ,,		3— 0—0
பன்னூற்றிரட்டு ,,		2— 0—0
சைவமஞ்சரி ,,		1— 8—0
ஞானமிர்தம் ,,		1— 0—0
தமிழ்ச்சொல்லகராதி ,, (உயிரெழுத்துமுடிய உதாரணங்களுடன்)		6— 0—0

[இவைகளுக்குத் தபால்சார்ஜ் வேறு.]

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்,
புரோப்ரைட்டர் அண் பத்திராதிபர்,

ADVERTISEMENT.

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். } **ஸ்ரீ காசி.** { பட்டு பீதாம்பரக் காட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முககண்டிகள 33உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உளளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருககும். சமமதமில்லாதவை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

வெண்பட்டு வேஷ்டிகள்.

முழம்	அகலம்	1-க்கு ரூ.		முழம்	அகலம்	1-க்கு ரூ.	
5	2½	6 முதல்	8	7	3	10 முதல்	13
5	3	7	9	8	3	12	15
6	2½	8	9	9	3	14	16
6	3	9	13	10	3	15	18

தபால் சார்ஜ பிரத்தியேகம்.

பனி! பனி!! பனி!!!.

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், நைஸும், நேர்த்தியுமான கம்பளிபபோர்வைகள், 6 முழம் நீளம் 3 முழ அகலம். சிவப்புமுதலிய சகல நிறததிலும தயாராக இருக்கின்றன. உருப்படி 1-க்கு ரூபா 5—0—0 தபால் செலவு பிரத்தியேகம

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	0	6	0

குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம் கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறுசெட்டு 1-க்கு ரூபா 2, பெரிய செட்டு 1-க்கு ரூபா 4

உடனே எழுதுங்கள்,

விலாசம்: மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி, **Benares City.**